International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நா. முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களுள் அணி நயங்கள்

**ஜெ. பாரதி**
முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை

**முனைவர் அ. ரவிச்சந்திரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மொழிக்கு இலக்கணங்களும், இலக்கியங்களும் முக்கியமானவை அவற்றுள் தமிழ் இலக்கியங்கள் போல் இலக்கணங்களும் இன்றியமையாதவையாக உள்ளன. அதிலும் வாழ்விற்கு இலக்கணம் கூறுகின்ற மொழியாகத் தமிழ் மொழி விளங்குகிறது. இசை என்பதற்கு உடன்பாடு, ஏற்றதாக இருத்தல், பாடு, மீட்டு, சங்கம் எனப் பலவாறாகப் பொருள் கொள்ளலாம். எனினும் இசை என்பதற்கு **"இசை அமைப்பது"** என்னும் பொருள் சிறந்ததாக அமைகிறது. முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்னும் மூன்றாகும். இதில் இயற்றமிழ் பண்ணொடு புணர்ந்து தாளத்தொடு நடைபெறும். அவை இசைத்தமிழாக உருவெடுக்கிறது. அத்தகைய தமிழிசை தமிழரின் வாழ்வியலோடு பண்டு தொட்டுப் பிணைந்து வந்திருக்கின்றன. தமிழ் ஐந்து வகையான இலக்கணங்களைக் கொண்டது. அவற்றுள் அணி என்பதற்கு அழகு, குழு, கூட்டம், வரிசை எனப் பொருள்படும். செய்யுள்களில் (பாடல்களில்) உள்ள அழகுகளைப் பற்றிக் கூறுவது அணி இலக்கணம் ஆகும். தமிழிலக்கண நூல்களான தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம் போன்ற நூல்கள் ஐந்து வகை இலக்கணங்களுள் அணி இலக்கணத்தையும் உள்ளடக்கிக் கூறுகின்றன. ஆயினும் அணி இலக்கணத்திற்கென்று தனியாக உருவான இலக்கண நூல்களான தண்டியலங்காரம் என்னும் நூல் அணி இலக்கணத்தைப் பற்றிய விரிவான இலக்கணக் கூறுகளைச் சிறப்பாகக் காட்டுகிறது. அணி இலக்கணம் மரபுக் கவிதைகளிலும், புதுக்கவிதைகளிலும் மட்டுமே இடம் பெற்றுள்ளன என்பதைத் தவிர, திரையிசைப் பாடல்களுக்கு அழகு சேர்ப்பவையாக அவற்றுள்ளும் அணி இலக்கணங்கள் பயின்று வருகின்றன என்பதையும் நா. முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களுள் காணலாகும் அணி நயங்களைத் தமிழ் உலகிற்குப் புலப்படுத்தும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை நோக்கப்படவுள்ளன.

**முதன்மைச் சொற்கள்**: அணிகள், தன்மையணி, உவமையணி, உவம உறுப்புகள், உருவகவணி, தீவகவணி, அதிசயவணி, தற்குறிப்பேற்ற அணி, விரோதவணி.

**முன்னுரை**

ஒருவரின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு இசையானது மிகவும் முக்கியத்துவமான ஒன்றாக உள்ளது. தற்கால ஆய்வுகள் இசை என்பதற்கு மன அழுத்த எதிர்ப்புச் சக்தியைத்

தரவல்லது என்கின்றனர். மனிதனின் வாழ்வியலில் ஓர் அங்கமாக இசை இருக்கின்றது.

நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களுள் அணி நயங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை நா. முத்துக்குமார் 1999 முதல் 2019 வரை எழுதிய திரையிசைப்பாடல்களுள் தண்டியலங்காரம் கூறும் அணிகள் எவை எவை அவைகள் திரையிசைப்பாடல்களுள் எவ்வாறு அழகு பெற இடம்பெற்றுள்ளன என்பதையும் நா.முத்துக்குமார் தன்னுடைய பாடல்களில் அணி நயங்களை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதனை தண்டியலங்காரத்தின் வழியாக இக்கட்டுரை ஆராய்ந்து விளக்கவுள்ளது.

**தன்மையணி**

ஒரு பொருளின் இயல்புத் தன்மையை நேரில் கண்டாற்போல் விளக்குவது தன்மையணி,

**எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்**
**சொன்முறை தொடுப்பது தன்மை ஆகும்.**

(நூற்பா – 27)

படம்: ஆறு பாடல்: யே ஃப்ரீயா வுடு

**இன்னைக்கு டைம் வருதோ**
**அது மட்டும் தான்**
**உனக்கு சொந்தம், நாளைக்கு**
**டைம் வருமோ அது யாருக்கு**
**தான் என்ன தெரியும்......**
**வாழ்க்கைக்கு இல்ல கேரண்டீ**
**உன் கனவுக்கு இல்ல வாரண்டீ......**

என்னும் வரிகளில் கவிஞர் நிலையாமையின் இயல்பினை நேரில் கண்டாற்போல் சுட்டிக்காட்டுகிறார்.

படம்: மின்சார கண்ணா

பாடல்: ஓ அங்கிள் ஓ அங்கிள்

**மலரின் உழைப்புகள் கனியாகும்**
**மழையின் உழைப்புகள் நதியாகும்**
**மூங்கில் உழைப்புகள் குழலாகும்**
**மனிதன் உழைப்புகள் பணமாகும்**
**முடியாது என்று கிடையாது**
**நீமுயன்றால் வெற்றி பெறலாம்.....**

என்னும் வரிகளில் இயற்கையின் இயல்புத் தன்மை அவற்றை நேரில் கண்டது போல இயல்பினை எடுத்துக்காட்டுகிறார் கவிஞர். இவ்வாறு ஒன்றன் இயல்பின் தன்மையினை தன்மையணி மூலமாக விளக்குகிறார் கவிஞர்.

**உவமையணி**

ஒருவர் தான் சொல்லக் கருதிய பொருளை அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளோடு இயைபு படுத்துவது ஆகும்.

**பண்பும் தொழிலும் பயனும் என்(று) இவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளொ(டு) பொருள்புணர்ந்(து)**
**ஒப்புமை தோன்றச் செப்புவ(து) உவமை.**

(நூற்பா – 29)

படம்: பாபநாசம்

பாடல்: ஏயா என் கோட்டிக்காரா

**குத்தால சாரல் போல் தலதட்டும் சேட்டைக்காரா.....**
**தேடி சேர்த்த காசு போல் காதல் இருக்குதா**
**காசப் போல் காதலும் செலவுக்கில்லடி.....**
**தட்டான் பூச்சி போல வண்ணம் அள்ளி தாரே.....**

என்னும் பாடலின் "போல" என்னும் உவம உருப்பினைப் பயன்படுத்தி உள்ளார். காசு உடன் காதலையும், தட்டான் பூச்சியின் வண்ணத்தையும், குத்தால சாரலினையும் (குற்றாலம்) உவமைப்படுத்தி உள்ளார்.

படம்: பையா பாடல்: அடடா மழைடா அட மழைடா

**மயில் தோகை போல இவள்**
**மழையில் ஆடும் போது**
**ரயில் பாலம் போல என்**
**மனசும் ஆடும் பாரு**
**மந்திரம் போல இருக்கு**
**புது தந்திரம் போல இருக்கு**
**பம்பரம் போல எனக்கு**
**தல மத்தியில் சுத்துது கிறுக்கு**
**உன்ன போல வேறாரும் இல்லை.....**

என்னும் வரிகளில் மயில் தோகை, ரயில் பாலம், பம்பரம் எனப் பலவற்றுடன் "போல" என்னும் உவம உறுப்பினைப் பயன்படுத்தி உவமை அணியினைக் காட்டுகிறார் கவிஞர்.

படம்: போக்கிரி, பாடல்: வசந்த முல்லை

**வசந்த முல்லை போல வந்து**
**ஆடிடும் வெண்புறா.....**
**குழந்தை போல போகோ சானல்**
**பாக்க வச்சா**
**காதல் என்பது ஆந்தையைப் போல**
**நைட்டு முழுவதும் முழிக்கும்**
**கம்பன் வீட்டு நாயைப் போல**
**கவிதையா அது குறைக்கும்.....**
**காபியைப் போல ஆறிப்போனா**
**கசக்கும்.....**

இப்பாடலில் கவிஞர் முல்லை பூ, குழந்தை, ஆந்தை, கம்பன் வீட்டு நாய், காபி என பலவற்றுடன் "போல" என்னும் உவம உறுப்பினை மட்டுமே பயன்படுத்தி உவமை யணியினை அழகாகத் தனது பாடலில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

**உருவகவணி**

தான் சிறப்பிக்க கருதிய பொருளை அப்பொருளுக்கு உவமையாகும் மற்றொரு பொருளுடன் ஒன்றுபடுத்திக் கூறுவது.

**உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்(து)**
**ஒன்(று) எனமாட்டின் அஃது உருவகம் ஆகும்** (நூற்பா – 34)

படம்: யாரடி நீ மோகினி

பாடல்: வெண்மேகம் பெண்ணாக

**வெண்மேகம் பெண்ணாக உருவானதோ.....**
**மஞ்சள் வெயில் நீ மின்னல் ஒளி நீ**
**கண் கலங்க நிற்க வைக்கும் தீ.....**

இப்பாடல் வரிகளில் ஒரு பெண்ணை வெண்மேகம், வெயில், மின்னல், தீ எனப் பலப்பொருளுடன் கவிஞர் உருவகப்படுத்தி யுள்ளார். இதில் உவமை உருபு மறைந்தும் பெண்ணை உவமையாகவும் வெயில், தீ, மின்னல், மேகம் போன்றவை உவமானமா கவும் இடம்பெற்றுள்ளன.

படம்: ஆறு பாடல்: நெஞ்சம் என்னும்

**நெஞ்சம் என்னும் ஊரினிலே**
**காதல் என்னும் தெருவினிலே**
**கனவு என்னும் வாசலிலே**
**என்னை கட்டிக் கொள்ள வந்தாயே.....**

என்னும் பாடல் நெஞ்சம், காதல், கனவு ஆகியவை உவமையாகவும் ஊர், தெரு, வாசல் ஆகியவற்றை உவமானமாகவும் கொண்டு உவம உருபு மறைந்து உருவக வணியாக வந்துள்ளன.

படம்: சமர், பாடல்: வெள்ளை மயில்

**வெள்ளை மயில் வெண்ணிலவில் கூத்தாட**
**ஒரு கன்னி புயல் கண்களுக்குள் காத்தாட....**
**மீசை புல்லின் மேல் இவள் முத்தம் பனித்துளி**

இவ்வரிகளில் பெண்ணை மயிலாகவும் வெண்ணிலவாகவும் உருவகப்படுத்தியுள்ள னர். இதனைப் போலவே கன்னியைப் புயலுட னும், மீசையைப் புல்லுடனும், முத்தத்தைப் பனித்துளியுடனும் உருவகம் செய்துள்ளார். உவமையாக பெண், மீசை, முத்தம் உவமானமாக மயில், நிலவு, புயல், புல், பனித்துளி ஆகியவை இடம் பெற்று உருவகவணி அழகாகப் பயன்படுத்தியுள்ளார் கவிஞர்.

**தீவகவணி**

ஓரிடத்தில் நின்ற சொல் பல இடங்களுக்கும் சென்று பொருளை விளக்குவது ஆகும். "தீவகம்" என்பதற்கு "விளக்கு" எனப் பொருள்படும்.

**குணம் தொழில்சாதி பொருள் குறித்(து) ஒருசொல்**
**ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்**
**தீவகம் செய்யுள் மூவிடத்(து) இயலும்**
(நூற்பா – 38)

படம்: கல்லூரி

பாடல்: ஜுன் ஜுலை மாதம்

**ஊர் கூடி வந்தாலும் எதிற்குமே**
**உன் விழி துடிக்கையில் துடிக்குமே**
**உன் சோகம் இறக்கி வைக்க**
**இறைவன் அனுப்பி வைத்த**
**தோள்கள் தோழமையில் இருக்குமே**
**கல்லூரி என்ன கொடுத்தது**
**கண்மூடி நினைத்தால் புரியுது**
**வெறும் கல்வி மட்டும் இல்லை**
**கண்கள் கலங்க வைக்கும் உறவுகள் நட்பு**

**எந்த உருப்பின் மோதினாலும்**

**நடந்த பாதையிலும்**

**நமது சிரிப்பொலிகள் இருக்குமே**

**விடுமுறைகள் வந்திடும் போதும்**

**வீட்டுக்குள் இன்பங்கள் ஏது**

**மறுபடியும் இங்கே வர தோன்றுமே**

**தனிமையில் சில நொடிகள் போக**

**வறுமையில் சில நொடிகள் போக**

**எல்லாரும் ஒன்றாக சேர**

**மனசுக்குள் ஆசைகள் மோத**

**கல்லூரி நம்மை அழைக்கும்.....**

இப்பாடலில் நட்பு, கல்லூரி என்னும் சொல்கள் பல இடங்களுக்குச் சென்று பொருளை விளக்கிதீவகவணியாகச் சிறப்பாக அமைந்துள்ளன.

**அதிசயவணி**

ஒரு பொருளின் உண்மைத் தன்மையினை உள்ளபடி கூறாமல் அதனை உயர்த்திக் கூறுவது ஆகும்.

**மனப்படும் ஒருபொருள் வனப்(பு) உவந்(து) உரைப்புழி**

**உல(கு) வரம்(பு) இறவா நிலைமைத்(து) ஆகிய**

**ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்**

(நூற்பா – 52)

படம்: சத்தம் போடாதே

பாடல்: அழகு குட்டி செல்லம்

**உன் பிஞ்சு விரல்கள் மோதி**

**நான் நெஞ்சம் உடைந்து போனேன்**

**ஆளை கடத்தி போகும் உன் கண்ணக்**

**குழியின் சிரிப்பில் விரும்பி மாட்டிக்கொண்டேன்**

**ரோஜாப்பூ கை ரெண்டும்**

**காற்றோடு கதை பேசும்.....**

**உன் பின்னழகில் பௌர்ணமிகள்**

**தக திம்மிதா ஜதி பேசும்**

**நீ சிணுங்கும் மொழி கேட்டால்**

**சங்கீதம் கற்றிடலாம்.....**

இவ்வரிகளில் குழந்தையின் விரல்கள், கண்ணக்குழி, கை, சினுங்கும் மொழி (மழலை மொழி), குழந்தையின் பின் தோற்றம் என அனைத்தையும் உள்ளபடி கூறாமல் ரோஜாப் பூ, பௌர்ணமி, சங்கீதம் என உயர்த்திக் கூறுகிறார் கவிஞர்.

படம்: வாழ்த்துகள்

பாடல்: எந்தன் வானமும் நீதான்

**எந்தன் வானமுன் நீதான்**

**எந்தன் பூமியும் நீதான்**

**உந்தன் கண்கள் பார்த்திடும்**

**திசையில் வாழ்கிறேன்.....**

**நீ நடக்கும் போது உந்தன் நிழலும்**

**மண்ணில் விழும் முன்பே ஏந்திக்**

**கொள்வேன்.....**

ஒரு பெண்ணை வானத்துடனும், பூமியுடனும் உயர்த்திக் கூறுகிறார். அதனைப் போலவே பெண்ணின் நிழலினை ஏந்திக் கொள்வேன் என உள்ளபடி கூறாமல் உயர்த்தி அதிசய அணியாக கூறுகிறார்.

**தற்குறிப்பேற்ற அணி**

இயல்பான நிகழ்வின்மேல் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றி சுவைப்பட கூறுவது ஆகும்.

**பெயர்பொருள் அல்பொருள் என இரு பொருளிலும்**

**இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன் (று)**

**தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்**

(நூற்பா – 54)

படம்: தென்னவன்

பாடல்: வினோதினி வினோதனை

**உன்னை தினம் சுமப்பதன் போதையில்**

**பூமி சுற்றுகிறதே.....**

**உன்னை மனம் நினைப்பதால்**

**மயக்கம் மறக்கிறதே.....**

இவ்வரிகளில் கவிஞர் பூமி சுற்றுவதும், மயக்கம் வருவதும் இயல்பான நிகழ்வுகள் அதில் ஒரு பெண்ணால்தான் இவை எல்லாம் நிகழ்கின்றன என தனது கருத்தினை உள்வைத்துக் கூறுகிறார்.

படம்: தீபாவளி

பாடல்: காதல் வைத்து காதல் வைத்து

**அதிகாலை விடிவதெல்லாம் உன்னை**

**பார்க்கும் மயக்கத்தில் தான்**

**அந்தி மாலை மறைவதெல்லாம்**

**உன்னை பார்த்த கிறக்கத்தில் தான்.....**

இப்பாடலில் பகல், இரவு வருவது இயற்கையாக நிகழக்கூடிய நிகழ்வு இந்த நிகழ்வானது பெண்ணால்தான் வருகிறது என கவிஞர் தனதுக் குறிப்பினை அமைத்துக் கூறுகிறார்.

**விரோதவணி**

மாறுபட்ட சொற்களையும், பொருள்களையும் கொண்டு மாறுபாட்டுத் தன்மையின் விளைவு தோன்றக் கூறுவது ஆகும்.

**மாறுபடு சொல்பொருள் மாறுபட்டு இயற்கை**

**விளைவுதர உரைப்பது விரோதம் ஆகும்.**

(நூற்பா – 80)

படம்: பில்லா-2 பாடல்: இதயம் இந்த இதயம்

**இன்னும் எத்தனை இன்பங்கள் தாங்கிடுமோ**

**இன்னும் எத்தனை துன்பங்கள் தாங்கிடுமோ**

**இது தவித்திடும் நெருப்பா**

**இல்லை குளிர்ந்திடும் நீரா**

**கேள்வியா இல்லை விடையா.....**

இவ்வரிகளில் தலைவியின் மனதில் தலைவன் மீதான ஐய்யங்கள், இன்பம், துன்பம், நெருப்பு, நீர், கேள்வி பதில் என மாறுபட்டத் தன்மைக் கொண்ட முரண்களை வைத்து அமைத்துள்ளார் கவிஞர்.

படம்: கல்லூரி பாடல்: சரியா இது தவறா

**சரியா இது தவறா**

**மழைதுளி வந்து விழுந்ததே**

**உப்பென மாறுமா இல்லை**

**முத்தென மாறுமா.....**

**ஆசை என்னும் வலையினை விரித்து**

**அல்லும் பகலும் அது காத்திருக்கும்.....**

இப்பாடலில் தலைவனின் மனதில் உள்ள ஐயங்களை சரி தவறு, உப்பு முத்து, பகல் இரவு என முரணானப் பொருளினைக் கொண்டு விரோதமாக அமைத்துள்ளார்.

படம்: காதல் பாடல்: பூவும் பிடிக்குது

**பூவும் பிடிக்குது நாரும் பிடிக்குது**

**பூமி பிடிக்குது வானம் பிடிக்குது**

**நதியும் பிடிக்குது நிலவும் பிடிக்குது**

**நீரும் பிடிக்குது நெருப்பும் பிடிக்குது**

இப்பாடலில் காதல் வயப்பட்ட தலைவன் பூ நாரு, பூமி வானம், நீர் நெருப்பு என மாறுபடப் பொருள்கள் எல்லாம் பிடிப்பதாக வும் மாறுபட்ட பொருளினைக் கொண்ட விரோதவணியினைக் கவிஞர் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

**முடிவுரை**

நா.முத்துக்குமாரின் திரையிசைப்பாடல்களுள் அணி நயங்கள் தண்டியலங்காரம் நோக்கில் ஆராய்ந்துப் பல்வேறு முடிவுகளைப் பெற முடிகின்றன. தன்மையணியில் பயின்று வந்துள்ள பாடல்கள், உவமை அணியில் பயின்று வந்துள்ள பாடல்கள், உருவக அணியில் பயின்று வந்துள்ள பாடல்கள், உவமை அணிக்கு பயன்படுத்திய உறுப்பு, உவமை, உவமேயம் எவைகள் எனவும் அவற்றைப்பாடலில் கையாண்டுள்ளார் என்ற முறைகளும் புலப்படுகின்றன. தீவகவணியாக அமைந்துள்ள பாடல்கள், அதிசயவணியாக ஒரு பொருளினை மிகுதிப்படுத்திக் கூறுகின்ற முறைகள், தற்குறிப்பேற்ற அணியாகத் தனதுக் கருத்தினைப் பொதிந்து வைத்துள்ள தன்மைகள், விரோத வணிக்காகப் பயன் படுத்தியுள்ள மாறுபட்ட சொற்கள் பொருள் கள் போன்றவைகள் தற்போதைய காலத்திலும் இலக்கணங்களை எவ்வாறு அமைந்துள்ளன என்பது இக்கட்டுரையின் வழிப் பெறப்படுகின்றன. மேலும் இதனை ஆராய்ந்தால் இன்னும் பலவகையான அணி களும் அவற்றின் வகைகளும் விளக்கிக் கூறுவதை அடுத்தக் கட்ட ஆய்வின் வளர்ச்சியாக எடுத்துக் கொள்ளலாம்.

**துணைநின்ற நூல்கள்**


1. நா. முத்துக்குமார் – கண்பேசும் வார்த்தைகள், கட்டுரைத் தொகுப்பு டிஸ்கவரி புக் பேலஸ் பப்ளிகேஷன்ஸ் - 2020
2. ச. திருஞானசம்பந்தம் – தண்டியலங்காரம் தெளிவுரை, ராஜா பப்ளிகேஷன்ஸ் - 2012